**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி.16/2018</u>** **<u>நாள் 21.06.2023</u>**

**<u>அ.சா.1 மகேந்திரன் த.பெ. குப்பு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிராமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=</u>**

(1) வெள்ளையங்கிரி, பாப்பாண்ணனன் எனக்கு அண்ணன் தம்பி உறவு. எதிரி மணி என் அண்ணன் வெள்ளையங்கிரிக்கு சகலை. இவ்வழக்கு சம்பவத்தில் எதிரிகளுக்கும், காயம்ஏற்பட்டு வெள்ளையங்கிரி, பாப்பாண்ணன், ராஜா மீது முருகேசன் கொடுத்த புகாரின் பேரில் இந்நீதிமன்றத்தில் சிசி 70/2017 வழக்கு நடந்துள்ளது என்றால் சரிதான், அந்த வழக்கிற்கும், என்னை அடித்ததற்கும் சம்மந்தமில்லை. அவர்கள் என்னுடன் சேர்ந்து 03.06.2017 அன்று திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அட்மிட் ஆனார்கள் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், முருகேசனும், மணியும் அட்மிட் ஆனார்கள் என்றால் சரியல்ல. என்னை பரிசோதித்த அதே விமலா மருத்துவர்தான் மேற்படி முருகேசனையும், மணியையும் பரிசோதனை செய்து சிகிச்சை வழங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக தனிபிராது திரு. மனோகரன் வழக்கறிஞர் அவர்களை வைத்து எதிரிகள் மற்றும் சிவகாமி, கேசவன், முருகன், பிரபு ஆகிய 7 நபர்கள் மீது வழக்கு போட்டிருந்தேன் என்றால் சரிதான்.

(2) மேற்படி 7 நபர்கள் அடித்துதான் எனக்க காயம் ஏற்பட்டது என்று என்னை பரிசோதனை செய்த மருத்துவரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். ஆனால் மருத்துவர் விபத்து பதிவேட்டில் என்னை ஒருபெண் மற்றும் 4 ஆண்கள் அடித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் சம்பவம் மாலை 6.00 மணிக்கு என்னுடைய வீட்டில் நடந்ததாக சொல்லியுள்ளனே் என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். புகாரில் உள்ள கைரேகைக்கும், நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் உள்ள கைரேகைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் இருக்கும்போது போலீஸார் அங்கு வந்தார்கள் என்றால்வந்தார்கள். அப்போது நான் மயக்க நிலையில் இருந்தேன் என்றால் சரிதான். அப்போது எனது மனைவி என்னுடன் இருந்தார் என்றால் சரிதான். அவர்தான் போலீஸாரிடம் சொன்னார் என்றால் சரிதான். எனக்கு எப்போது மயக்கம் தெளிந்தது என்றால் ஒருநாள் கழித்து மயக்கம் தெளிந்தது. நான் 5.00 மணிக்கு அய்யங்கொல்லையில் என் அம்மா முனியம்மாள் மற்றும் எனது அண்ணன் பாப்பாண்ணன் ஆகியோர் ஏர் ஓட்டியதாக சொல்லும்போது நான்

அங்கில்லை என்றால் சரிதான். அப்போது நான் ஜொல்லகவுண்டனூரில் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான், பின்னர்தான் அழைத்து சென்றார்கள்.

(3) ஜொல்லகவுண்டனூர் என்னுடைய வீட்டிற்கும், அய்யங்கொல்லைக்கும் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான், இருசக்கர வாகனத்தில் சென்றால் ஒரு மணி நேரம் ஆகும். நான் ஜொல்லகவுண்டனூரிலிருந்து 5.00 மணிக்கு கிளம்பினேன். அய்யங்கொல்லைக்கு 6.00 மணிக்கு சேர்ந்தேன். நான் சென்ற போது அங்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான், அவரவர்கள் வீட்டில் அவரவர்கள் இருந்தார்கள். டிராக்டர் உழுத நிலம் எனக்குதான் சொந்தம் என்று நான் ஆவணம் ஏதேனும் போட்டுள்ளேனா என்றால் இல்லை, அதன் பட்டா எனது பெயரில் தான் உள்ளது. எதிரிகள் வீட்டில் நானும், பாப்பாண்ணன், வெள்ளையங்கிரி, ராஜா ஆகியோர் அத்துமீறி நுழைந்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தினோம் என்றால் இல்லை, அவர்கள்தான் என்னை தாக்கினார்கள்.

(4) நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையிலும், சென்னையிலும் வேலூரிலும் மருத்துவம் பெற்றதற்குண்டான எக்ஸ்ரே, டிஸ்சார்ஜ் சம்மரி, சிடிஸ்கேன் ரிப்போர்ட் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அனைத்து மருத்துவ ஆவணங்களும் என்னிடத்தில் உள்ளது. நான் என்னுடைய முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள அனைத்தும் தவறானவை என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக எனது மனைவியைதான் விசாரித்தார்கள் என்றால் என்னை விசாரிக்கவில்லை என்றால் முதலில் நான் மயக்கமாக இருந்தேன், மறுநாள் காலை 8.00 மணியளவில் போலீஸார் வந்து விசாரித்தார்கள்.

(5) மேற்படி திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் விசாரித்த பின்பு வேறு எங்கும் விசாரிக்கவில்லை. மருத்துவரிடம் நான் மேல் உதட்டில் காயமடைந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், சாட்சி தானாக கீழ் தாடையில் ராடு வைத்துள்ளார்கள் என்று கூறுகிறார். நான் விழுந்ததாக சொல்லும் பற்களை போலீஸாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. சென்னையில் மருத்துவரிடம் கொடுத்தேன். எனக்கு எந்த பல்லும் விழவில்லை என்றும், எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்று மருத்துவர் சான்றிதழிலில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

(6) போலீஸார் விசாரணையில் முருகன் கட்டையால் அடித்தார் என்றும், பிரபு மற்றும் அடையளாம் தெரியாத 3 நபர்கள், தெரிந்த 4 நபர்கள் மொத்தம் 7 நபர்கள் வந்தார்கள் என்று கூறியிருந்தேனா என்றால் கூறியிருந்தேன். சிவராஜ் செங்கல்லால் அடித்தார் என்று புகாரிலும், போலீஸார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவரிடம் குச்சியால் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. மேற்படி 7 நபர்கள் என்னை துாக்கி கொண்டு போய் அடித்தது தான் தெரியும் எ்ன்றால் யார் யார் எதனால் அடித்தார்கள் என்று தெரியாது என்றால் சரிதான்.எதிரியை நாங்கள் அடித்துவிட்டு எங்கள் மீது அவர் கொடுத்த புகாரிலிருந்து தப்பிக்க வேண்டி பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் இந்த புகாரினை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை = இல்லை.